**கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2023 திதசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 6623-LK (சலுகைக் கடன்) மற்றும் 6624-LK (சலுகைக் கடன் அற்ற) SF இலக்க 2021 ஏப்ரல் 22 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிகோள், நிதியளித்தல் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகராகும். எனினும் இச்செயற்திட்டத்தின் நிறைவேற்றும் பொறுப்பானது 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக மாறியது. கண்டி பல்வடிவ போக்குவரதது முனையத்தின் பொதுப் போக்குவரத்து பாவனையாளர்களுக்கான நுழைவு, செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கண்டி பல்வடிவ போக்குவரத்து முனையத்தை (KMTT) அபிவிருத்தி செய்தல், KMTT இனைச் சூழவுள்ள பகுதியில் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துதல், நிறுவன ரீதியான வலுப்படுத்தலும் இயலுமையினை கட்டியெழுப்புதலும்,, தற்செயலான அவசர பரிகார கூறு ஆகிய 04 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிட்ட மொத்த கிரயம் ரூபா 13,762 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 69.33 மில்லியனாக இருந்தது. இதில் யு.எஸ் டொலர் 64.33 மில்லியனுக்குச் சமமான எஸ்டிஆர் 47.13 மில்லியன் சலுகை நிபந்தையின் கீழ் IDA இனால் நிதியளிக்கப்படுவதுடன் யு.எஸ் டொலர் 5 மில்லியன் சலுகையற்ற நிபந்தனைகளின் கீழ் IDA இனால் நிதியளிக்கப்படும் செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2021 மே 06 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2025 மே 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீ டுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 39 ஆம் பிரிவின் பிரகாரம் காசும் காசுக்குச் சமமானவைகளினதும் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை ஒப்பீடு செய்யும் போது வெளிநாட்டு நாணய மாற்றுக்களின் காரணமாக ஏற்பட்ட நட்டம் அறிக்கையிடப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் மாற்றங்களினால் உருவாகிய ரூபா 15.47 மில்லியன் நாணயமாற்று நட்டமானது நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசோட்டமாகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் நிதி நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசோட்டம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இறுதி மீதியானது அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 15.47 | அடுத்த நிதி ஆண்டிலிருந்து சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு இணங்க கணக்காளர் காசோட்ட கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | ஏழு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான புலனாய்வு, விபரமான வடிவமைப்பு மற்றும் கிரய மதிப்பீட்டிற்காக மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு | 2.87 | உடன்பட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் இது பொறியியலாளரினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சான்றுபடுத்தப்படவில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 06 இன் 09 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் பதியப்பட்டுள்ளதா |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்த வேண்டிய தொகை ரூபா 2.87 மில்லியனாக இருந்தது. எனினும் இது தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | எனவே 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஒரு பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | என்பதனை கணக்காய்ர் நிதிக்கூற்றுக்கில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை / கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2.2.4 ஆம் உபபிரிவு | வெற்றிடம் தொடர்பான பொது அறிவித்தலினை ஒரு பொது ஊடகத்தில் விளம்பரப்படுத்த வேண்டியதுடன் நேர்முகப்பரீட்சையினை வெளிப்படைத்தன்மையாக நடாத்துதல் வேண்டும். எனினும் செயற்திட்டம் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றாது ஒரு தகுதிவாய்ந்த உத்தியோகத்தரினை சேர்த்துக்கொண்டிருந்தது. | உடன்படுகிறேன். இது அமைச்சு மற்றும் RDA இன் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டார். | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு புதிய உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் புதிய ஆட்சேர்ப்பிற்கான அறிவித்தல்கள் பொது ஊடகங்களில் பரந்த அளவில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) 09/2009 ஆம் இலக்க 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய மற்றும் 09/2009(i) ஆம் இலக்க 2009/06/17 ஆந் திகதிய சுற்றறிக்கை | நிறுவனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தினூடாக தங்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்துதல் வேண்டும். எனினும் 2024 மே 27 ஆந் தகிதி வரையும் ஒரு விரல் அடையாளமிடும் இயந்திரத்தினைப் பொருத:துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகிறேன். விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விரல் அடையாளமிடும் இயந்திரத்தினூடாக வருகைகளை உறுதிப்படுத்தும் வரை சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரவேலைப் படிகளை செலுத்தாதிருத்தல் வேண்டும். |
| (இ) 3/2018 ஆம் இலக்க 2018 யூலை 16 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | (i) அரசாங்க நிறுவனங்கள் செயற்பாட்டு குத்தகை முறைமையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுத்திறைசேரியிடம் | உடன்படுகிறேன். இது உலக வங்கி நிதியளித்த செயற்திட்டம் என்பதனால் பொதுத் திறைசேரியின் | தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை மீறிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்க |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு பொதுத்திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாட்டு குத்தகை முறைமையில் (பயன்படுத்தி திருப்பி ஒப்படைத்தல்) 03 வாகனங்களைப் பெற்றுக் கொண்டிருந்தது. | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாட்டு குத்தகை முறைமையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேற்கூறிய வாகனங்களின் குத்தகை ஒப்பந்த காலமானது ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன. | ளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | (5) (இ) பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க 16 இருக்கைகளை மிகைக்காத டபிள் கெப் மற்றும் வேனின் மாதாந்த வாடகையின் உச்ச எல்லை முறையே ரூபா 165,000 மற்றும் ரூபா 170,000 ஆக இருத்தல் வேண்டும். எனினும் மேற்கூறிய சுற்றறிக்கையை பின்பற்றாது ஒரு வாகனம் ரூபா 269,000 மாதாந்த வாடகைக்கு 03 வாகனங்களை செயற்திட்டம் பெற்றுக்கொண்டிருந்தது. | மேலே கூறப்பட்டவாறு. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கண்டி பல்வகை போக்குவரத்து முனையத்தின் (KMTT) தொடக்க வேலைகளுக்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 03 ஆண்டுகளை எடுத்திருந்ததுடன் 2024 மார்ச் 18 ஆந் திகதியிலிருந்து தொடங்கி 03 ஆண்டுகளுக்குள் KMTT இனை நிர்மாணிப்பதற்கு ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. செயற்திட்டம் அதன் வேலைகளையும் ஒன்பது மாடிக் | உடன்படுகிறேன். ஒப்பந்தமானது மாகா இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடட்டிற்கு வழங்கப்படுவதுடன் பூர்த்தியாக்கல் திகதி 2027 மார்ச் 18 ஆகும். ஒன்பது மாடிக் கட்டிடத்திற்கான நிதியை பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்களின் காரணமாக நோக்கெல்லையானது ஏழு மாடிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதுடன் தற்பொழுது இலங்கை அரசாங்கம் | உடன்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அறிவுறுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத்தினையும் 2026 இற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருக்கும் என அவதானிக்கப்பட்டது. | நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் கேள்வியை வழங்குவதற்கான பெறுகை செயன்முறையானது நடைபெற்று வருகின்றது. | |
| (ஆ) | கடன் வழங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்கள் பிந்தாமல் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டினை செயற்திட்டம் தயாரித்தல் வேண்டும். | ஒப்பந்தம் அண்மையிலேயே வழங்கப்பட்டதுடன் செயற்திட்ட செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டினைத் தயாரிப்பதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அறிவுறுத்துதல் வேண்டும். |
| (இ) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் பிரகாரம், தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் செயற்திட்ட முகாமையாளர், சிரேஷ்ட பயணிகள் முனைய வடிவமைப்பு பொறியியலாளர் ஆகியோரின் முக்கிய தொழில்சார் தகமைகளானது வேண்டப்பட்ட ஆகக் குறைந்த தகமைகளை நிறைவேற்றியிருக்கவில்லை. எனவே நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அவ்வாறான பதவிகளுக்காக மாற்று நபர்களை தெரிவு செய்வதற்கு சிபாரிசு செய்திருந்தது. எனினும் ஒப்பந்தக்காரரினால் தெரிவுசெய்யப்பட்ட நபர்களை 2024 மே மாதம் இறுதி வரையும் செயற்திட்டம் கணக்காய்விற்குத் தெரிவிக்கவில்லை. | ஒபபந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் உரிய பதவிகளுக்கு தகமையுள்ள பொருத்தமான நபர்களை சேர்த்துக்கொள்ளும் செயன்முறையை ஒப்பந்தத்திற்கான ஆலோசகர் மேற்கொண்டு வருகின்றார். | TEC அறிக்கையின் படி ஒப்பந்தக்காரரினால் தகமையுள்ள உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா இல்லையா என்பதனை செயற்திட்ட பணிப்பாளர் உறுதி செய்தல் வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் இச்செயற்திட்டத்திற்காக தயாரித்த செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தினை 2026 இல் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2024 இல் ஆரம்பித்து 03 ஆண்டுகளில் பல்வடிவ முனையத்தினை நிர்மாணிப்பதற்காக ஒரு ஒப்பந்தக்காரருடன் செயற்த்திட்டம் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க கடன் காலம் நீடிக்கப்படுதல் வேண்டும். எனினும் செயற்திட்ட காலத்தை | உடன்படவில்லை. 2029 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையும் கடன் உடன்படிக்கையை நீடிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க நாங்கள் கடன் வழங்கும் முகவராண்மைக்கு அறிவித்துள்ளோம். | கடன் நீடிப்புக்கு கடன் வழங்குபவரிடமிருந்து சம்மதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீடிப்பதற்காக இந்த அறிக்கைத் திகதி வரையும் கடன் வழங்குனரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருககவில்லை. | | |
| (உ) | நிதி அமைச்சிடமிருந்து வேண்டப்பட்ட ஒரு தூதுக்குழு அறிக்கையானது வெளிநாட்டு நிதியளிக்கும் முகவராண்மைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. நாங்கள் ஏற்கனவே கிரய மதிப்பீட்டினை உலக வங்கிக்கு சமர்பிபித்துள்ளோம். தற்பொழுது இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் ஒப்பந்தத்தினை வழங்குவதற்கான பெறுகைச் செயற்பாடானது நடைபெற்று வருகின்றது. | இந்த விடயம் தொடர்பாக முறையான புலனாய்வினை கணக்கீட்டு உத்தியோகத்தர் நடாத்துதல் வேண்டும். |
| (ஊ) | பல்நோக்கு முனையத்தின் நிர்மாணத்திற்காக வேண்டப்பட்ட காணிக்கான இழப்பீடாக 825 நபர்களுக்கு ரூபா 712 மில்லியன் செலுத்தப்பட்டது. அவற்றில் ரூபா 35.06 மில்லியன் தொகையானது 2019 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்காக 17 நகபர்களுக்கு வியாபார நட்டமாக செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளின் தாமதத்தின் காரணமாக செயற்திட்டம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அதே நபர்களுக்கு ரூபா 22.2 மில்லியனை செலுத்த வேண்டியிருந்தது. மேலும் இச்செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யும் இக்கொடுப்பனவினை செலுத்த வேண்டி ஏற்படும். | இணங்கிக் கொள்கிறேன். | உடன்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் செய்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளின் தாமதத்தின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிர்மாண வேலைகளுக்காக ஒப்படைக்கப்பட்ட காணியை துப்பரவு செய்வதற்கும் புனரமைப்பதற்கும் முறையே ரூபா 188,000 மற்றும் ரூபா 1,371,934 செலுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியில் பாதகாப்பு கட்டணமாக ரூபா 3,000,000 செலுத்தப்பட்டது. | உடன்படுகிறேன். பெற்றுக்கொள்ளக்கூடியதான கடன் தொகையானது ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைவாக இருந்ததன் காரணமாக பெறுகைச் செயன்முறையானது எதிர்பார்க்கப்பட்டதனை விட நீண்ட காலம் எடுத்திருந்ததுடன் அமைச்சரவையின் அங்கீகார செயன்முறையை முன்னெடுத்து செல்ல வேண்டியிருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்காலத்தில் இந்த வகையான தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் மற்றும் இலங்கை அரசாங்க கூறின் கீழ் முறையே ரூபா 6,030 மில்லியன் மற்றும் ரூபா 300 மில்லியன் தொகைகளான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 69.03 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடன் ஒதுக்கீடு மற்றும் ரூபா 128.57 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்க நிதி ஒதுக்கீடு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. | உடன்படுகிறேன். பெற்றுக்கொள்ளக்கூடியதான கடன் தொகையானது ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைவாக இருந்ததன் காரணமாக பெறுகைச் செயன்முறையானது எதிர்பார்க்கப்பட்டதனை விட நீண்ட காலம் எடுத்திருந்ததுடன் அமைச்சரவையின் அங்கீகார செயன்முறையை முன்னெடுத்து செல்ல வேண்டியிருந்தது. | வேலை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கியிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக ஒரு மேலதிக சிரேஷ்ட பொறியியலாளர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | உடன்படுகிறேன். செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக அமுலாக்கல் முகவராண்மையிலிருந்து (RDA) உரிய பிரதான பதவி நியமிக்கப்பட்டது. செயற்திட்டத்தினை இலக்கிடப்பட்ட திகதிக்குள் பூர்த்திசெய்வதற்கு சிரேஷ்ட பொறியியலாளரின் சேவை முக்கியமானதாக உள்ளதனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் (MSD) அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே வேண்டுதல் விடுவிக்கப்பட்டுள்ளது. | அனைத்து ஆட்சேர்ப்புக்களும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் அங்கீகரித்த ஆளணியினருக்கு உட்பட்டுள்ளதா என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 புறம்பான நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டியிருந்த ஒரு பொறுப்பாக ரூபா 185,954 காட்டப்பட்டிருந்த அதே வேளை மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்திடமிருந்து பெறவேண்டிய | RDA கணக்குகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டது. ஏதாவது செம்மையாக்கல் உருவாகியிருக்குமாயின் 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | கணக்காளர் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் மீதிகளின் வித்தியாசத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீதியாக ரூபா 1,634,458 இனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பதிவு செய்திருந்தது. எனவே ரூபா 1,448,504 வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.5 முறைமைகளும் கடப்பாடுகளும்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தினால் 09 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றில் 05 வாகனங்கள் விதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் 03 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் RDA இடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாத அதே வேளை 2500 கிலோ மீற்றர் மாதாந்த எல்லைக்கு மிகையாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தியிருந்ததுடன் மேலதிக கட்டணமாக ரூபா 447,195 செலுத்தப்பட்டது. | உடன்படவில்லை. செயற்திட்டம் 08 வாகனங்களை மாத்திரம் பயன்படுத்தியதுடன் திருத்தங்களின் காரணமாக 01 வாகனம் மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை. | 01/2024 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறகிகையின் படி வாகன பராமரிப்பு கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் வாகன பராமரிப்பு கிரயம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2.64 மில்லியன் மற்றும் ரூபா 21.11 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டிற்கான கிரயம் ரூபா 18.47 மில்லியனால் அதிகரித்திருந்தது. எனினும் செயற்திட்டத்தினால் வாகன பராமரிப்பு கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஏனைய செயற்திட்டங்களால் பயன்படுத்திய ஐந்து வாகனங்கள் RDA இடமிருந்து இச்செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டன. அவற்றிற்கு தொடர்ச்சியான பராமரிப்பு தேவைப்படுகின்றது. எனவே மேற்கூறிய வாகன பராரிப்பு கிரயம் அதிகரித்திருந்தது. | 01/2024 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறகிகையின் படி வாகன பராமரிப்பு கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |